सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

### ஊடக அறிக்கை

இந்திய அரசின் கலாச்சார அமைச்சினுடைய ஆதரவுடன் இந்தியத் துணைத்தூதரகமானது வடமாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் இரு கலாச்சார நிகழ்ச்சிகளையும் கிளிநொச்சியில் ஒரு நிகழ்ச்சியையும் நடாத்தியது. இந்த முயற்சியானது இந்திய செவ்வியல் நடன இசைக்கலைகளை வட மாகாணத்தில் வளர்த்துவரும் நிறுவனங்களின் ஊடாக உள்ளூர் கலாச்சார திறமைகளை வளர்க்கும் இந்தியத் துணைத்தூதரகத்தின் முன்முயற்சிகளில் மூன்றாவதாகும்.

'இயற்கை ஆடுகளம்' எனும் பெயரிடப்பட்ட முதலாவது நிகழ்வானது திருமறைக்கலாமன்ற மாணவர்களால் 13 பெப்ரவரி 2014 அன்று மேடையேற்றப்பட்டது. நடன நிகழ்வானது ஐந்து பகுதிகளாக நிகழ்த்தப்பட்டது. அவை புவியில் மனித குலத்தின் இருப்புக்கு அவசியமான பஞ்ச பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றியதாக இருந்தன. இந்நிகழ்வில் ஐம்பது மாணவர்கள் பங்குபற்றினர். நிகழ்வின் கருவானது திருமறைக்கலாமன்ற அங்கத்தவர்களால் நடன அமைப்பு செய்யப்பட்டு பலே நடன வடிவிலான பரதநாட்டியமாக அளிக்கை செய்யப்பட்டது. திருமறைக்கலாமன்ற அரங்கில் அளிக்கை செய்யப்பட்ட இந்நிகழ்வை 300 இற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் கண்டு களித்தனர். யாழ்ப்பாண மாநகர முதல்வர் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இரண்டாவது நிகழ்வான 'கலைக்கூடல்' கிளிநொச்சியில் மார்ச் 01, 2014 அன்று அங்குள்ள காவேரி கலாமன்றத்தினராலும் ஏனைய கலாச்சார நிறுவனங்களாலும் அளிக்கை செய்யப்பட்டது. இதில் செவ்வியல் மற்றும் நாட்டார் கலைகள்

நிகழ்த்தப்பட்டன. பதினொரு பகுதிகளாக நிகழ்த்தப்பட்ட இதில் 110 மாணவர்கள் பங்கெடுத்து ஆடல் நிகழ்த்தினர். வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ திரு. த. குருகுலராஜா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். கௌரவ அமைச்சர் அவர்கள் 'இலங்கை இந்திய அழகியல்' எனும் பெயரிலான திரு.பி. வசந்தரூபன் என்பவரது புகைப்படக் கண்காட்சியையும் தொடக்கிவைத்தார். திரு. வசந்தரூபன் அவர்கள் இந்தியாவில் 'நாட்டார் கலை மரபு' எனும் தலைப்பில் முது தத்துவமாணி ஆய்வை மேற்கொண்டு வருகிறார். நூற்றுக்கு மேற்பட்ட புகைப்படங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் நிகழ்த்தும் முதலாவது கலாச்சார நிகழ்வு இதுவாகும். இதனை அம்மாவட்ட மக்கள் மிகவும் வரவேற்றிருந்தனர். கிளிநொச்சி கூட்டுறவுச்சங்கத்தின் 500 பேரை அடக்கக்கூடிய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் அரங்கம் நிறைந்த பார்வையாளர்கள் கலந்துகொண்டனர்.

'ஸ்ருதி லய கானம்' எனும் மூன்றாவது நிகழ்வானது யாழ்ப்பாணத்தில் மார்ச் 09, 2014 இல் நிகழ்த்தப்பட்டது. இந்திகழ்வானது பிருந்த கானாலயா மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவரால் அளிக்கை செய்யப்பட்டது. நிகழ்வின் முக்கிய அம்சமாக திருமதி கோகிலத்வனி விஜயராகவன் அவர்களின் வீணை இசை அமைந்தது. இவர் பிருந்த கனாலயாவின் தலைவராவார். இந்நிகழ்விற்கு பக்கவாத்தியங்களாக மன்டலின் திரு.எஸ்.தினேஷ் அவர்களாலும் புல்லாங்குழல் திரு எஸ்.திலோசன் அவர்களாலும் இசைக்கப்பட்டன. நிகழ்வில் கர்நாடக குரலிசைக் கச்சேரியும் பரதநாட்டிய ஆற்றுகையும் நிகழ்த்தப்பட்டன. இந்தியத்துணைத்தூதர் திரு. வெ.மகாலிங்கம், யாழ்மாநகர கௌரவ திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா முதல்வர், யாழ். மாநகரசபை, கௌரவ ஈ.சரவணபவன், பாராளுமன்ற உறுப்பினர், திரு.எஸ்.சுகிர்தன், வலி வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மூன்று மணித்தியாலங்கள் நீடித்த நிகழ்வு திருமறைக்கலாமன்ற அரங்கில் நிகழ்த்தப்பட்டிருந்ததுடன் அரங்கு நிறைந்த பார்வையாளர்கள் நிகழ்வைக் கண்டுகளித்தனர்.

அனைத்து கலாச்சார நிகழ்வுகளும் பார்வையாளர்களின் அமோக வரவேற்பைப் பெற்றன.